[17th July 1962

Employment Exchange

* 345 *Q.*—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Finance be pleased to state the percentage of vacancies in the private sector filled in through Employment Exchange?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The percentage of vacancies in the private sector filled through Employment Offices during the quarter ending 31st March 1962 is 14 (fourteen).

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தனியார் நிறுவனங்களிலே 14 சதவிகிதம் தான் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சுகள் மூலம் அமர்த்துகிருர்கள் என்று தெரிவதால், அவர்கள் ஆட்களை எடுக்கும்பொழுது, இந்த எக்ஸ்சேஞ்சுகள் மூலமாகத் தான் எடுக்கவேண்டுமென்று சட்டத்தைத் திருத்த உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : காலிஸ்தானங்களுக்கான தகுதியையும் பார்க்கவேண்டியிருக்கிறது. எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சுகள் அனுப்புகிறவர்களை எல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறுவது முறையல்ல. ஏற்படும் வேக்கன்ஸிகளை எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சுகளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று மத்தியப் பாராளுமன்றத்திலே சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் அமல் நடத்தப்பட்டு வருகிறது.

திரு. முனு ஆதி : தனியார் துறையிலே முதலாளிகள் ஆட்களை நேரடியாக வேலைக்கு எடுத்துக்கொள்வதால், மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடம் சொல்லி நடவடிக்கை எடுத்தால் நன்ருக இருக்கும். 14 என்பது சதவிகிதத்திலா அல்லது எண்ணிக்கையிலா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சதவிகிதம் என்றுதான் சொன்னேன். இதிலே மத்திய சர்க்காருடைய அனுமதி வேண்டியதில்லை. சட்டம் செய்திருக்கிருர்கள். அதன்படி அமல் நடத்தப்பட்டு வருகிறது.

திரு. மு. கருணாநிதி : இந்த சதவிகிதம் சென்ற ஆண்டைவிட உயர்ந்திருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது ஒரு க்வார்ட்டர் ஆண்டுக்குத் தான்.

திரு. வை. சங்கரன் : சாதாரணமாக ஒரு வேலை காலியாய் இருந்தால், அதற்குத் தகுதியுள்ள விண்ணப்பங்கள் எல்லாவற்றையும் பானலாக அனுப்பும் வழக்கம் இருப்பதால், அதிலே தகுதியுள்ளவர்களைப் பார்த்து வேலை காலியுள்ள தனியார் நிர்வாகம் தேர்ந்து எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, தேர்ந்தெடுப்பதை இந்த எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சுகள் மூலமாகச் செய்யவேண்டுமென்ற விதியை ஏற்படுத்துவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு கூறியதுபோல், எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சுகள் அனுப்புகிறவர்களைத் தான் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னுல், சில ஸ்தானங்களுக்கு அவர்கள் தகுதியில்லாமல் இருக்கலாம். அதனுல்தான் அவ்வாறு கட்டாயப் படுத்த வேண்டியதில்லை என்று சொன்னேன்.

Unemployment

* 346 *Q.*—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken to solve the problem of unemployment among graduates?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The problem of unemployment among graduates is a part of the general problem of the educated unemployed. The assistance of the Employment